# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2004 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, புகையிலை வரி (திருத்தச்) சட்டம்

---

*(2004 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 08 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2004, ஒற்றோபர் மாதம் 08 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை : ரூபா 9.25** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2004 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, புகையிலை வரி (திருத்தச்) சட்டம்

[2004 ஒற்றோபர் மாதம் 08 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச.வ.-ஓ. 18/2004

### 1999 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, புகையிலை வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம், 2004 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, புகையிலை வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*சுருக்கப் பெயர்.*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1999 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, புகையிலை வரிச் சட்டம் பின்வருமாறு இத்தால் திருத்தப் படுகின்து:—

*1999 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்துக்கான பொதுத் திருத்தம்.*

(அ) "சிகரட்டுப் பதிலீட்டுப் பொருட்கள்" என்னும் சொல்லமைப்பு அத்தகைய சட்டவாக்கத்தில் காணப்படும் இடங்களிலெல்லாம் அவற்றை நீக்கிவிடுவதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) "புகையிலை" என்னும் சொல், விரிவுப் பெயர் மற்றும் சுருக்கப் பெயர் தவிர்ந்த, அத்தகைய சட்டவாக்கத்தில் காணப்படும் இடங்களிலெல்லாம் "புகையிலை அல்லது பீடிப் புகையிலை" என்னும் சொற்களைப் பதிலிடுவதன் மூலமும்,

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகிறது என்பதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 5அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 5அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

*"பீடிப் புகையிலையை இறக்குமதி செய்தல்.*

5அ. (1) ஆளெவரும், மதுவரி ஆணையாளர் தலைமையதி பதியினால் அதற்கென வழங்கப்படும் உரிமமொன்றை அவர் வைத்திருப்பவராகவிருந்தாலொழிய, பீடிப் புகையிலையை இறக்குமதி செய்தலாகாது.

(2) பீடிப் புகையிலையை இறக்குமதி செய்வதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும் —

(அ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் மதுவரி ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செய்யப்படுதல் வேண்டும் ;

(ஆ) வித்துரைக்கப்பட்ட தொகையிலான ஒரு விண்ணப்பக் கட்டணத்துடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும்.

(3) பீடிப் புகையிலையை இறக்குமதிசெய்வதற்கான உரிமமொன்றை வைத்திருக்கின்ற ஆள் ஒவ்வொருவரும், மதுவரி ஆணையாளர் தலைமையதிபதியினால் அவ்வாறு தேவைப்படுத்தப்பட்டபோதெல்லாம், விடயத்துக்கேற்ப, குறிப்பிடப்பட்ட ஏதேனும் காலப்பகுதி அல்லது காலப்பகுதிகள் தொடர்பில் அவரினால் இறக்குமதி செய்யப்பட்ட பீடிப் புகையிலை பற்றிய விவரங்களைக் கொண்டுள்ள விபரத்திரட்டொன்றைக் கொடுத்துதவுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது :—

"ஆணைப் பத்திரத் துடனோ அல்லது அது வின்றியோ பரிசோதனை செய்வதற்கான தத்துவங்கள்.

7.(1) மதுவரி ஆணையாளர் தலைமையதிபதி அல்லது பரிசோதகர் தரத்துக்குக் குறையாத தரத்திலுள்ள மதுவரித் திணைக்களத்தின் எவரேனும் அலுவலர் அல்லது கண்காணிப்பாளர் தரத்துக்குக் குறையாத தரத்திலுள்ள சுங்கத் திணைக்களத்தின் எவரேனும் அலுவலர் அல்லது பொலிசு உபபரிசோதகர் தரத்துக்குக் குறையாத தரத்திலுள்ள எவரேனும் பொலிசு அலுவலர், இச்சட்டத்தின் கீழான ஏதேனும் தவறு புரியப்பட்டுள்ளதா அல்லது புரியப்பட்டுக் கொண்டிருக்கின்றதா என்பதனை நிச்சயிக்கும் நோக்கத்துக்காக, அல்லது அத்தகைய படகில், கலனில், வாகனத்தில், கொள்கலனில், தொழிற்சாலையில் அல்லது வளவுகளில் உள்ள புகையிலை, சிகரட்டுகள், சுருட்டுகள், பீடிகள், பீடிப் புகையிலை அல்லது சுங்கான் புகையிலை என்பவற்றின் அளவை நிச்சயிக்கும் நோக்கத்துக்காக, அல்லது புகையிலை வரி, 1994 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மதுவரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் நியதிகளின்படி

செலுத்தப்படற்பாலதான ஏதேனும் தீர்வை, சுங்கத் தீர்வை அல்லது வேறேதேனும் வரி அதன்மீது செலுத்தப்பட்டுள்ளதா அல்லது செலுத்தப்படற் பாலதா என்பதனை நிச்சயிக்கும் நோக்கத்துக்காக அல்லது இச்சட்டத்தின் கீழ் மதுவரி ஆணையாளர் தலைமையதிபதிக்குக் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் விபரத்திரட்டின் அல்லது ஏதேனும் வெளிப் படுத்துகையின் செம்மையைச் சரிபார்க்கும் நோக்கத்துக்காக அல்லது விடயத்துக்கேற்ப, அத்தகைய புகையிலை, சிகரட்டுகள், சுருட்டுகள், பீடிகள், பீடிப் புகையிலை அல்லது சுங்கான் புகையிலை என்பன தொடர்பான எவையேனும் புத்தகங்களை அல்லது ஆவணங்களைப் பரி சோதிக்கும் நோக்கத்துக்காக—

(அ) நீதிவானொருவரினால் வழங்கப்படும் ஆணைப்பத்திரமொன்றின் அதிகாரத் தின்கீழ் இச்சட்டத்தின் கீழான தவறொன்று புரியப்பட்டுள்ளது அல்லது புரியப்படும் சாத்தியமுள்ளது என நம்பு வதற்கான காரணங்களை உடையவராக, பெறப்பட்ட தகவலின் மீதும் அவசிய மானதென அவர் எண்ணுகின்றவாறான அத்தகைய விசாரணையின் பின்னரும் ; அல்லது

(ஆ) இச்சட்டத்தின் கீழான தவறொன்று புரியப்பட்டுக் கொண்டிருக்கும் அல்லது புரியப்படும் சாத்தியமுள்ளதாகவிருக்கும் பொழுதெல்லாம், அத்துடன் தவறாளர் தப்பிச் செவ்வதற்கான அல்லது தவறானது புரியப்பட்டுக் கொண்டிருக் கும் அல்லது புரியப்படும் சாத்தியமுள்ள தாகவிருக்கும் சான்றை மறைப்பதற்கான சந்தர்ப்பத்தை அவருக்கு அளிக்காமல் தேடுதல் எழுத்தாணையொன்றைப் பெறமுடியாதவிடத்து ஆணைப்பத் திரமின்றி, அவரது நம்பிக்கைக்கான ஏதுக்களைப் பதிந்த பின்னர்,—

(i) இச்சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிகின்றாரெனச் சந்தேகிக்கப்படும் எவரேனுமாளைத் தடுத்து நிறுத்தித் தேடுகையிடுவதற்கும் ;

(ii) இச்சட்டத்தின் கீழ் ஏதேனும் புகையிலை, சிகரட்டுகள், சுருட்டுகள், பீடிகள், பீடிப் புகையிலை, சுங்கான் புகையிலை அல்லது ஏதேனும் தடைசெய்யப்பட்ட பொருள் கொண்டு செல்லப்படுகின்ற அல்லது இடம்பெயர்க்கப்படுகின்ற அல்லது கொண்டு செல்லப்படுகின்றதாக அல்லது இடம்பெயர்க்கப்படுகின்றதாகச் சந்தேகிக்கப்படுகின்ற ஏதேனும் படகை, கலனை, வாகனத்தை அல்லது கொள்கலனைத் தடுத்து நிறுத்தித் தேடுகையிடுவதற்கும் ;

(iii) அத்தகைய ஆளின்வசம் காணப்படும் அல்லது அத்தகைய படகில், கலனில், வாகனத்தில் அல்லது கொள்கலனில் கொண்டு செல்லப்படும் ஏதேனும் பொதியை, பார்சலை அல்லது கொள்கலனை திறந்து பரிசோதனை செய்வதற்கும் ; அல்லது

(iv) ஏதேனும் புகையிலை எவையேனும் சிகரட்டுகள், சுருட்டுகள், பீடிகள், பீடிப் புகையிலை அல்லது சுங்கான் புகையிலை வைத்திருக்கப்படும் அல்லது வைத்திருக்கப்படுவதாக அல்லது களஞ்சியப்படுத்தப்படுவதாகச் சந்தேகிக்கப்படும் ஏதேனும் தொழிற்சாலையினுள் அல்லது எவையேனும் வளவுகளினுள் பிரவேசித்துப் பரி சோதனை செய்வதற்கும்,

அவசியமான அத்தகைய நடபடிகளை எடுக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் அலுவலர், அவ்வுட்பிரிவினால் அவருக்களிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கையில், —

(அ) அத்தகைய ஏதேனும் படகில், கலனில், வாகனத்தில் அல்லது கொள்கலனில் கொண்டு செல்லப்படுகின்ற அல்லது இடம் பெயர்க்கப்படுகின்ற அல்லது அத்தகைய தொழிற்சாலையில் அல்லது வளவுகளில் வைத்திருக்கப்படுகின்ற அல்லது களஞ்சியப்படுத்துகின்ற அத்தகைய ஆளின் உடைமையிலுள்ள ஏதேனும் தடைசெய்யப்பட்ட பொருளைக் கைப்பற்றலாம் ;

(ஆ) அத்தகைய தவறுக்கான சான்றாகக் காண்பிக்கப்படக்கூடியதாக, அத்தகைய ஏதேனும் படகில், கலனில், வாகனத்தில் அல்லது கொள்கலனில் கொண்டுசெல்லப்படுகின்ற அல்லது ஏதேனும் தொழிற்சாலையில் அல்லது எவையேனும் வளவுகளில் வைத்திருக்கப்படுகின்ற அல்லது களஞ்சியப்படுத்தப்படுகின்ற அத்தகைய எவரேனுமாளின் உடைமையிலுள்ள ஏதேனும் ஆவணத்தைக் கைப்பற்றலாம் ;

(இ) எவரேனும் ஆள் தடைசெய்யப்பட்ட பொருள் ஒன்றைத் தனதுடமையில் வைத்திருந்தால், அல்லது இச்சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிவதில் பயன்படுத்தப்படும் ஏதேனும் படகை, கலனை, வாகனத்தை அல்லது கொள்கலனை அவரது கட்டுப்பாட்டில் வைத்திருந்தால் அத்தகைய ஆளை இச்சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிந்தமைக்காகக் கைதுசெய்து தடுத்து வைக்கலாம் ;

(ஈ) தவறைப் புரிவதில் பயன்படுத்தப்பட்டுள்ளதென அல்லது பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றதென அத்தகைய அலுவலருக்குத் தோன்றுகின்ற அல்லது அத்தகைய தவறுக்கான சான்றாகக் காண்பிக்கப்படக்கூடியதான ஏதேனும் படகை, கலனை, வாகனத்தை, கொள் கலனை அல்லது வேறேதேனும் பொருளை அல்லது சாதனத்தைக் கைப்பற்றலாம்.

(3) முதலாம் உட்பிரில் குறிப்பீடு செய்யப்படும் அலுவலர் ஒவ்வொருவரும் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும், சமாதான அலுவலரொருவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஒராம், (2) ஆம் உட்பிரிவுகளினால் அலுவலரொருவருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களை அவ்வுட்பிரிவுகளில் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய அலுவலர் பிரயோகிப்பதனை எதிர்க்கின்ற அல்லது அவருக்கு முட்டுக்கட்டையிடுகின்ற ஆளொவ்வொருவரும், இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

இப்பிரிவின் நோக்கங்களுக்காக, "தடைசெய்யப்பட்ட தற்பொருள்" என்பது, எந்தப் புகையிலையின் மீது, சிகரட்டுகளின்மீது, சுருட்டுக்களின்மீது, பீடிகளின் மீது, பீடிப் புகையிலையின்மீது அல்லது சுங்கான் புகையிலையின்மீது புகையிலை வரி அல்லது வேறு ஏதேனும் தீர்வை அறவிடப்படவில்லையோ அந்த ஏதேனும் புகையிலை, எவையேனும் சிகரட்டுகள், சுருட்டுகள், பீடிகள், பீடிப் புகையிலை அல்லது சுங்கான் புகையிலை என்று பொருளாகும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவு, "பீடிகளை, சிகரட்டுப் பதிலீட்டுப் பொருட்களை அல்லது சுங்கான் புகையிலையை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பீடிகளை, பீடிப் புகையிலையை, அல்லது சுங்கான் புகையிலையை" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு, "பீடிகள், சிகரட்டுப் பதிலீட்டுப் பொருட்கள் அல்லது சுங்கான் புகையிலை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, , "பீடிகள், பீடிப் புகையிலை அல்லது சுங்கான் புகையிலை," என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு இத்தால் பின் வருமாறு திருத்தப்படுகின்றது :—

(i) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "பீடிகள், சிகரட்டுப் பதிலீட்டுப் பொருட்கள் அல்லது சுங்கான் புகையிலை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பீடிகள், பீடிப் புகையிலை அல்லது சுங்கான் புகையிலை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ii) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவில் "அத்தகைய தவறுக் காகச் சுமத்தப்படற்பாலதான ஆகக்கூடிய குற்றப் பணத்தின் ஐந்தில் ஒன்றுக்குக் குறையாத தொகைக்குச் சமனான பணத்தொகையொன்றுக்கு" என்னும் சொற் களுக்குப் பதிலாக, "ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத பணத்தொகையொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(iii) அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவில் —

(அ) "பீடிகளை, சிகரட்டுப் பதிலீட்டுப் பொருட் களை அல்லது சுங்கான் புகையிலையை" என்னும் சொற்க ளுக்குப் பதிலாக, "பீடிகளை, பீடிப் புகையிலையை அல்லது சுங்கான் புகை யிலையை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) "அத்துடன் அவர் அவற்றை பகிரங்க ஏலத் தின் மூலம் விற்பனை செய்வித்து, விற்பனை களில் இருந்து கிடைக்கும் வரும்படிகளை 17 ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப் பட்டவாறு கையுதிர்த்தல் வேண்டும்." என்னும் சொற்க ளுக்குப் பதிலாக, "அத்துடன் அவர் அவற்றை அழிக்கச் செய்வித்தல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**8.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவு அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின் வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

"(ஆ) ஏதேனும் புகையிலையின், சிகரட்டுகளின், சுருட்டுகளின், பீடிகளின், பீடிப் புகையிலையின் அல்லது சுங்கான் புகையிலையின் விற்பனை புறநீங்கலாக, 15 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ்ப் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களினதும் வாகனங்களினதும் விற்பனையிலிருந்து பெறப்பட்ட வரும்படிகள்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**9.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவு "பீடி" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

'"பீடிப் புகையிலை" என்பது, பீடி உற்பத்தி செய்வதற்காக உபயோகிக்கப்படும் புகையிலை எனப் பொருள்படும்;'.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**10.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*